# நொச்சிமோட்டையூடாக வரமுயன்ற படையினர் மீது சினைப்பர் தாக்கு; இராணுவத்தினர் ஷெல் வீச்சு

வவுனியாவிற்கு வடக்கே நொச்சிமோட்டை ஊடாக முன்னேற முயன்ற படையினர் மீது விடுதலைப்புலிகள் தாக்குதல் நடத்தினர் ஒரு தொகுதி இராணுவத்தினரும் தமிழ் குழு ஒன்றைச் சேர்ந்தவர்களும் இவ்வாறு முன்னேற முயற்சி எடுத்த போது புலிகள் இவர்கள் மீது சினைப்பர் தாக்குதலை மேற்கொண்டனர். இதில் ஒரு சிப்பாய் பலியானார். இதைத் தொடர்ந்து படையினர் தமது முயற்சியை கைவிட்டு தமது நிலைகளுக்குத் திரும்

—04ஆம் பக்கம் பார்க்க

பக்கம் நான்கு விலை ரூபா 5.00

# முரசொலி

முரசு 66 ஒலி 30 பிரசோற்பத்தி மார்கழி 12 (27-12-1991) வெள்ளி

## இரு அகதி முகாம்களில் 108 பேருக்கு வயிற்றோட்டம், கண்நோய்!

கோப்பாய் உதவி அரசாங்க அதிபர் பிரிவிலுள்ள புத்தூர் கிராமசபைப் பிரதேசத்திலுள்ள இரு அகதி முகாம்களில் முப்பதுக்கு மேற்பட்டவர்களுக்கு வயிற்றோட்ட நோய் பரவியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. இதேபோல கோப்பாய் அகதிமுகாம்களில் மொத்தமாக நாற்பத்தெட்டுப் பேருக்கு வயிற்றோட்டமும், அறுபதுக்கு மேற்பட்டவர்களுக்கு கண்நோய் ஏற்பட்டுள்ளதாகவும் தெரிய வருகிறது. முகாம்களில் சுகாதார வசதிகள் இல்லாமலும், மருந்து வசதிகள் இன்றியும் மக்கள் பெருங்கஷ்டப்படுவதாகவும் அங்குள்ள மக்கள் தெரிவிக்கின்றனர் ஆவரங்கால் நடராசா இராமலிங்க வித்தியாசாலை, ஆவரங்கால் மகாஜன வித்தியா

—04 ஆம் பக்கம் பார்க்க

# ஜேர்மனியில் உள்ள அகதிகளுக்கு ஆதரவாக பொதுமக்கள் ஊர்வலம்!

## எதிர்த்த நாஸிக் குழுவுடன் கைகலப்பு பலர் காயம்; வாகனங்கள் சேதம்

ஜேர்மனியில் உள்ள வெளி நாட்டவர்கள் நாஸி தீவிரவாதிகளால் தாக்கப்படுவதை கண்டித்தும் இதே சமயம் வெளிநாட்டவர்கள் தாக்கப்படுவதை நிறுத்தக் கோரியும் ஜேர்மனியில் நடைபெற்ற இரு மாபெரும் ஊர்வலங்கள் பெரும் கைகலப்பில் முடிந்துள்ளன.

ஜேர்மன் சுவர் தகர்க்கப்பட்ட இரண்டாம் ஆண்டு நிறைவு விழா அண்மையில் ஜேர்மனியில் நடைபெற்றது. இத்தினத்தில் ஜேர்மனியில் உள்ள வெளிநாட்டவர்கள் மீது நடத்தப்படும் தாக்குதல், சித்திரவதை ஆகியவற்றைக் கண்டித்து ஜேர்மனிய மக்களில் ஒரு பகுதியினர் ஊர்வலம் ஒன்றை ஏற்பாடு செய்தனர். கிழக்கு, மேற்கு ஜேர்மனியைச் சேர்ந்த பல நகரங்களிலிருந்தும் ஒரு லட்சத்திற்கும் மேற்பட்ட பொதுமக்கள் இவ் ஊர்வலத்தில் கலந்து கொண்டனர்.

...04ஆம் பக்கம் பார்க்க

## வல்வைக்கடலில் பீரங்கித் தாக்குதல் வள்ளங்கள் பலத்த சேதம்

நேற்று முன்தினம் இரவு 12. 30 க்கு வல்வைக் கடலில் ரோந்து சென்ற இரு பீரங்கிப் படகுகளிலிருந்து ...ப்பட்டன

பாக்குநீரிணைக் கடலில் தரித்து நிற்கும் கடற்படைக் ...

இடம் பெற்றதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கடற்படைக் கப்பலும் வள் ...

## பூநகரி ஊரடங்கு

பூநகரியில் இன்று காலை 6 மணிமுதல் காலவரையறையற்ற ஊரடங்குச் சட்டம் அமுல் செய்யப்படுவதாக கூட்டுப்படைத் தலைமையகம் நேற்று அறிவித்தது.

### அஜித்சிங் நீக்கம்

கட்சி விரோத நடவடிக்கையில் ஈடுபட்டார் என குற்றஞ்சாட்டப்பட்டு ஜனதா தள் கட்சியிலிருந்து அஜித்சிங் ஆறு ஆண்டுகளுக்கு நீக்கப்பட்டுள்ளார்.

### ஒய்வூதியம்

இலங்கை வங்கி யாழ். ஆஸ்பத்திரி வீதிக் கிளையில் புலம்பெயர்ந்த ஒய்வூதியம்பெறுபவர்கள் நவம்பர், டிசம்பர் 91 மாதங்களுக்குரிய ஒய்வூதிய வவுச்சரை பெற்றுக் கொள்ளலாம் என பிரதான முகாமையாளர் அறிவிக்கின்றார்.

## வல்வை ஆஸ்பத்திரி அம்புலன்ஸ் வண்டிக்கு எரிபொருள் இல்லை

வல்வை இந்திராணி அரசினர் வைத்தியசாலை அம்புலன்ஸ் வண்டிக்கு எரிபொருள் இல்லை இதனால் நோயாளிகள் பெரும் கஷ்டத்துக்குள்ளாகின்றார்கள். தற்போது ஏற்பட்டுள்ள எரிபொருள் தட்டுப்பாட்டால் வல்வை இந்திராணி அரசினர் வைத்தியசாலைக்கும் ஏற்பட்டுள்ளது. அவர்

—04 ஆம் பக்கம் பார்க்க

## மட்டக்களப்பில் இராணுவக்கொடூரம் ஜூலை மாதம் 5703 பேர் பலி

மட்டக்களப்பு மாவட்டத்தில் கடந்த ஜூலை மாத இராணுவ நடவடிக்கையின் போது 10,296 பேர் மரணமடைந்தும் காயமடைந்துமுள்ளதாக செயலக வட்டாரங்கள் தெரிவித்தன. இக்காலகட்டத்தின் போது இராணுவ நடவடிக்கையால் 5703 பேர் மரணமானதாகவும், 4593 பேர் காயமடைந்துள்ளதாகவும் மேலும் தெரிவிக்கப்படுகிறது. 08

## 'சாவ்' விளையாட்டுப்போட்டி

12. 30 மணியளவில் கடலில் ரோந்து சென்ற இரு பீரங்கிப் படகுகளிலிருந்து மீன்பிடி வள்ளங்கள் மீது பீரங்கித் தாக்குதல்கள் மேற் கொள்

பாக்கு நீரிணைக் கடலில் தரித்து நிற்கும் கடற்படைக் கப்பலிலிருந்து மீன் பிடிவள்ளங்கள் மீது பரா வெளிச்சம் பாய்ச்ச இத் தாக்குதல்கள்

கப்படுகிறது.

கடற்படைக் கப்பலும் வள்ளங்கள் மீது தாக்குதலை நடத்தியது. பாதிப்புக்குள்

—04 ஆம் பக்கம் பார்க்க

# பனிப்போரில் அமெரிக்கா வென்றுவிட்டது - புஷ் பெருமிதம்

கடந்த 50 ஆண்டுகளுக்கும் மேலாக அமெரிக்க சோவியத் வல்லரசுகளிடையே நடைபெற்ற பனி போரில் (cold war) அமெரிக்காவே இறுதியில் வெற்றிபெற்றுள்ளது என அமெரிக்க ஜனாதிபதி புஷ் தெரிவித்துள்ளார்.

இறுக்கமான நிலைமையை ஒட்டி தொலைக்காட்சியில் பேசிய அமெரிக்க ஜனாதிபதி, புதிய ரஷ்ய குடியரசு ஐ நாவிலும், பாதுகாப்புச் சபையிலும் முன்னைய சோவியத் யூனியனின் இடத்திற்கு பதிலாக அமர்த்தப்படுவதை அமெரிக்கா அங்கீகரித்துள்ளதாகத் தெரிவித்தார்.

—04 ஆம் பக்கம் பார்க்க

### எஸ். பி. சவான் சொல்கிறார்

# ஆயுதங்களை ஒப்படைக்கும்வரை உல்பாவுக்கு எதிராக நடவடிக்கை

அஸாம் உல்பா தீவிரவாதிகள் ஆயுதங்களை அரசிடம் ஒப்படைத்து அரசியல் சாசனத்தை ஏற்றுக்கொண்டதாக அறிவித்தாலே மத்திய அரசு அவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தும்.

இந்திய உள்துறையமைச்சர் எஸ். பி. சவான் இவ்வாறு தெரிவித்துள்ளார். உல்பா குழு முழுமையாக சரணடையும் வரை தற்போது அவர்களுக்கு எதிராக இந்திய இராணுவம் எடுத்து வரும் 'ஒபரேஷன் றைனோ' என்ற இராணுவ நடவடிக்கை நிறுத்தப்படமாட்டாது எனவும்சவான்

—04 ஆம் பக்கம் பார்க்க

என பிரதான ஆகாமையாளர் அறிவிக்கின்றார்.

## மண்ணெண்.

## வழங்க ஏற்பாடு

காரைநகர் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தினர் காரைநகர் மக்களின் நன்மை கருதி கொழும்பிலிருந்து இரண்டு லோட் மண்ணெண்

—04 ஆம் பக்கம் பார்க்க

## நிவாரணத்தை அதிகரிக்குக

வடகிழக்கில் இடம்பெயர்ந்தோருக்கான நிவாரணக் கொடுப்பனவுத் தொகை போதாதென்றும் அது அதிகரிக்கப்படல் வேண்டுமெனவும் எதிர்க்கட்சி எம். பி

—04 ஆம் பக்கம் பார்க்க

## உதவிப்பணத்துடன் செலவுப்படியும்

வறுமைக் கோட்டிற்குக் கீழ் வசிக்கும் மக்களுக்குக் கொடுக்கப்படும் மாதாந்த உதவிப் பணம் அதிகரிக்கப்படல் வேண்டும் என சுதந்திரக் கட்சி எம். பி தென்னக்கோன்

—04 ஆம் பக்கம் பார்க்க

### 'சாவ்' விளையாட்டுப்போட்டி

# ஸ்ரீலங்கா, இந்திய அணிகளிடையே கடும் போட்டி நிலவுகிறது

கொழும்பில் நடைபெற்று வரும் சாவ் விளையாட்டுப் போட்டியில் தற்போது ஸ்ரீலங்கா அணிக்கும் இந்திய அணிக்கும் இடையில் கடும் போட்டி நிலவுகிறது.

நேற்று நடைபெற்ற போட்டிகளில் இதுவரை ஸ்ரீலங்கா அணி 21 தங்கப் பதக்கங்களையும் இந்திய அணி 19 தங்கப்பதக்கங்களையும் பெற்

—04 ஆம் பக்கம் பார்க்க

# ரஷ்ய சமஷ்டி அமைப்பை இந்தியாவும் அங்கீகரித்தது

புதிய ரஷ்யசமஷ்டி அமைப்பை இந்தியா அங்கீகரித்துள்ளதாக அறிவித்துள்ளது இத்தகவலை வெளியிட்ட இந்திய வெளியுறவுச் செயலர் ஜே. என். டிக்ஷித் ஏனைய குடியரசுகளையும் இந்தியா முறைப்படி அங்கீகரித்து சில குடியரசுகளுடன் இராஜீய தொடர்பையும் ஏற்படுத்தியுள்ளது என்றார்

—04 ஆம் பக்கம் பார்க்க

# மன்னார்தீவு அகதிமுகாமில் ஐவர் கடத்தப்பட்டுக் கொலை

மன்னார்த் தீவில் உள்ள அகதிமுகாம்களில் தங்கியுள்ள தமிழ் மக்கள் கடத்திச் செல்லப்பட்டு கொல்லப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த இருவாரத்தில் இவ்வாறு ஐந்து தமிழர் படுகொலை செய்யப்பட்டுள்ளனர். இராணுவத்தினரின்

—04 ஆம் பக்கம் பார்க்க

# நோயற்ற வாழ்வுக்கு சூழல் சுகாதாரம் அவசியம்

23-12-91 முதல் 29-12-91 வரை அனுஷ்டிக்கப்படும் சூழல் சுகாதார வாரத்தினையொட்டி யாழ் மாநகராட்சி மன்றம் அறிவுறுத்தல் ஒன்றினை விரிவான அறிக்கை வடிவில் வெளியிட்டுள்ளது.

அவ்வறிக்கையில் கூறப்பட்டுள்ளதாவது:-

இவ்வாரத்துடன் மட்டுமன்றி தொடர்ந்துவரும் காலங்களிலும் சூழல் சுகாதாரத்தினை மக்கள் பேணிப் பாராமரிக்க வேண்டிய தலையான கடமைமட்டுமன்றி ஒவ்வொருவரதும் உரிமையும் கூட. மக்கள் இடம்பெயர்வு, பொருளாதார நெருக்கடி, உணவுப் பற்றாக்குறை, போக்குவரவு வசதிகள் இல்லாமை போன்ற காரணிகளால் மக்கள் சொல்லொண்ணாத் துயரங்களை அனுபவித்து வருகின்றனர். இந்நிலையில் சூழல் சுகாதாரம் நல்ல முறையில் ஒவ்வொருவராலும் பராமரிக்கப் படுதல் அத்தியாவசியமாகும் மக்கள் நோயற்ற வாழ்வு வாழ்வதற்கும். தூய்மையான, அமைதியான சூழல் வேண்டும். மக்கள் தாம் வதியும் வீடு, அதன் அகச்சூழல்— புற சூழலை மிகவும் தூய்மையாகவும், அழகாகவும் வைத்திருத்தல் அவசியமானது. சூழல் பாதிப்பிற்கு ஒழுங்கைகள், தெருக்கள், வடிகால்கள் துப்புரவாக பராமரிக்கப்படுதலும், மிகவும் கருத்தூன்றிக் கவனிக்கப்படவேண்டிய அம்சங்களாகும் குப்பை கூழங்களை கண்ட இடங்களில் போடுதல், பொறுப்பற்ற தன்மையாக கழிவுப்பொருட்களை கண்டபடி போடுதல் விரும்பத்தகாத, ஆபத்தான செயல்களாகும் இவைகளால் தொற்றுநோய்கள் பரவும் நிலையேற்படும்.

மக்கள் அவற்றை தத்தமது வதிவிடங்களிலேயே புதைத்து, வீட்டுத்தோட்டங்களுக்கு பசளையாக உபயோகித்தல் உபயோகமான முறையாகும், எரித்தல் இலகுவான மற்றுமோர் முறையாகும்.

இன்றைய சூழ்நிலையில் சூழல் சுகாதாரத்தை மேம்படுத்துவதற்கும் நகரத்தை தூய்மையாக வைத்திருப்பதற்கும் கீழ்க்காணும் நடவடிக்கைகளை மேற்கொள்ளும் வண்ணம் அவ்வறிக்கையில் கேட்டுள்ளது.

- ★ குப்பை கூழங்களைக் கண்டபடி போடாதீர்கள்.
- ★ குப்பை கூழங்களை புதையுங்கள்/ எரியுங்கள்.
- ★ மாநாகரசபை சுத்திகரிப்பு பகுதியினால் கழிவுகளை ஒழுங்காக அகற்றுவதற்கு உதவியாக பொது இடங்களில் இதற்கென்று ஒதுக்கப்பட்ட இடத்தில் குப்பை கூழங்களை போடுங்கள் வீடுக் குப்பைகளை வீதியில் கண்டபடி போடுவது தடுக்கப்பட்டுள்ளது
- ★ உணவுச்சாலைகளின் முன்புறம் கழிவுததொட்டிகளை/ தகரங்களை வைத்து அதில் கழிவுப் பொருள்களை போடுங்கள்.
- ★ மலகூடத்தில் மட்டும் மலம் கழியுங்கள். (நகரின் மத்தியில் பொது மலகூடம் ஒன்று அமைக்கப் பட்டுள்ளது.)

எனவே சூழல் சுகநலம் பேணிக்காப்பது எங்கள் கடமை- எங்கள் உரிமை.

## சுகாதார அறிவுரைகள்

- ★ கொதித்து ஆறிய நீரையே குடியுங்கள்
- ★ புகைத்தல் எம் முதல் எதிரி
- ★ மது எமது இரண்டாம் எதிரி
- ★ காயப்பட்டால் ஏற்புவலித் தடை ஊசி பெற்றுக் கொள்ள வேண்டும்.
- ★ வெற்றிலை சாப்பிடும் பழக்கம் தீர்க்க வேண்டும் வாயில் புற்றுநோய் உண்டாகும்.
- ★ நிலத்தில் துப்புவது நோய்க்கிருமிகளைப் பரப்பும்; கைக்குட்டையைப் பயன்படுத்துங்கள்
- ★ பல்புற்று நோய்களை ஆரம்பத்தில் கண்டுபிடித்தால் குணப்படுத்தலாம். அறிகுறிகளைத் தெரிந்திருங்கள்.

நன்றி:- சுகாதார அறிவுரைகள்

# ★ 2000 வாவி வள்ளங்கள், 700 கடல் வள்ளங்கள், 75 கண்ணாடி இழைப்படகுகள் சேதம்

# மட்டக்களப்பில் 15 ஆயிரம் மீன்பிடியாளர் குடும்பம் பாதிப்பு!

மட்டக்களப்பில் ஏற்பட்ட வன்செயல்கள் காரணமாக 2000 வாவி மீன்பிடிவள்ளங்கள் பாதிப்படைந்திருப்பதாக மாவட்டக் கடற்றொழில் விரிவாக்க அலுவலகம் மதிப்பிட்டுள்ளது எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இதேபோல 700 கடல் மீன்பிடி வள்ளங்களும், 75 இயந்திரம் பொருத்தப்பட்ட கண்ணாடி இழைப்படகுகளும் பாதிக்கப்பட்டிருப்பதாக மதிப்பிடப்பட்டுள்ளது.

இம் மாவட்டத்தின் இரண்டாவது பெரிய தொழிலாக மீன்பிடி விளங்கி வந்தது.

15 ஆயிரம் குடும்பங்களைச் சேர்ந்த 24 ஆயிரத்து 800 பேர்வரை இதில் ஈடுபட்டு வந்தனர்.

ஆழ் கடலில் மீன்பிடிப்பதில் இன்றும் உள்ள கட்டுப்பாடுகள் வாவியின் சில பகுதிகளிலுள்ள தடைகள் காரணமாகவும், தொழிலை இழந்தோருக்கு நிவாரணம் வழங்குவதில் காட்டப்படும் அசமந்தம் காரணமாகவும் மீன்பிடித்துறை மிகவும் பாதிக்கப்பட்டு வருகிறது என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (16)

## ★ இந்தியாவில் ஜனநாயகம் பற்றி ஆர்ப்பாட்டம் நடத்திய திபெத் பெண்கள் பொலிஸாரால் மானபங்கம் எனப் புகார்

சீனப் பிரதமரின் இந்திய விஜயத்தின்போது பாதுகாப்பு கடமையிலீடுபட்டிருந்த பொலிஸார் திபெத்திய பெண்களை மானபங்கப்படுத்தினர் எனப் புகார் செய்யப்பட்டுள்ளது என்று ராய்டர் செய்தி ஸ்தாபனம் செய்தி வெளியிட்டுள்ளது.

இப் பெண்கள் ஜனநாயகம் சம்பந்தமாக ஆர்ப்பாட்டம் நடத்தியபோது பொலிஸாரால் மானபங்கப்படுத்தப்பட்டனராம்.

இப் புகார் தொடர்பாக விசாரணை நடத்துமாறு இந்திய உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

## கிறிஸ்மஸ் தினத்தன்று குடாரப்புவில் சிரமதானம்

கிறிஸ்துவின் பிறப்பை நினைவு கூரும் ஒளிவிழாவை முன்னிட்டு வடமராட்சி கிழக்கிலுள்ள குடாரப்பு வடக்கு றோ. க. ஆரம்பத் தொடர் நிலைப்பள்ளி மாணவர்களும், ஆசிரியர்களும் ஒரு மைல் நீளமான வீதி ஒன்றைச் சிரமதானம் மூலம் துப்புரவு செய்தனர்.

தொடர் நிலைப்பள்ளி அதிபர் அருட்சகோதரி கடகாக்கினர் தலைமையில், தொடர் நிலைப் பள்ளியிலிருந்து பிரதான வீதிக்குச் செல்லும் வீதியே இவ்வாறு துப்புரவுசெய்யப்பட்டதாகும்.

### சாரணர்க்கு...

யாழ் மாவட்ட சாரணர் சங்கத்தைச் சேர்ந்த குழுச் சாரணர் தலைவர்கள், சாரணத் தலைவர்கள், திரி சாரணர்கள், குருளைச் சாரணர்த் தலைவர்கள், கனிஷ்ட, சிரேஷ்ட சாரணர்கள் மற்றும் சாரண உத்தியோகஸ்தர்களை நாளை 28 ஆம் திகதி சனிக்கிழமை காலை 9 மணிக்கு கொக்குவில் இந்துக் கல்லூரியில் கூடுமாறு சாரணர் மாவட்ட ஆணையாளர் திரு ஆர். மகேந்திரன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

## ● கிழக்கு வெள்ளம்: 10 ஆயிரம் குடும்பங்கள் வீடிழப்பு, 7 ஆயிரம் வீடு சேதம்

சமீபத்தில் கிழக்கில் பெய்த பெரு மழையால் ஆலையம்பதி, களுவாஞ்சிக்குடி, மட்டக்களப்பு நகர், வாவிக்கரையைச் சேர்ந்த பத்தாயிரம் குடும்பங்கள் வீடிழந்துள்ளன

ஏழாயிரம் வீடுகள் சேதமடைந்திருப்பதாக அறிய வந்

## 'சினிமாஸ் கோப்பில்' ★ சிவராஜன் ★

சென்னையில் டெல்ட்டா இன்டநெஷனல் என்ற படநிறுவனம், சிவராஜன் என்ற பெயரில் சினிமாஸ்கோப்பில் தமிழ்ப் படம் ஒன்றைத் தயாரிக்கிறது. இதன் கதை முன்னைநாள் பாரதப் பிரதமர் ராஜீவ்காந்தியின் கொலையை மையமாகக் கொண்டது எனத் தெரிவிக்கப்படுகின்றது.

பிரமாண்டமான முறையில் தயாராகும் இப் படத்தின் கதாநாயகன் மலைச்சாரல் படப்புகழ் ராஜ்குமார் என்றும், ராஜீவ்காந்தியாக நடிக்க ராஜ், கமல் என்ற புதுமுக நடிகர் ஒருவர் தெரிவு செய்யப்பட்டுள்ளார் என்றும் மற்றைய நடிகை, நடிகர்களின் தெரிவு நடந்து கொண்டிருக்கிறது என்றும் அறிவிக்கப்படுகின்றது. இப் படத்தின் பாடல்களைக் கவிஞர் முத்துலிங்கம் எழுத சிவராஜா இசையமைக்கிறார். ஒளிப்பதிவை ஆர். முரளி கவனிக்க, திரைக்கதை வசனம் டைரக்சன் மூன்றையும் இயக்குநர் யோசப் ராஜீவ் மேற்கொண்டுள்ளார். (16)

## தொழில் நுட்பக் கல்லூரி பரீட்சைகள் பெப்ரவரியில் நடைபெறுமென உறுதி

யாழ் தொழில் நுட்பக் கல்லூரி மாணவர் அவையின் பிரதிநிதிகள் குழுவும், அதிபரும் சமீபத்தில் கொழும்பு சென்று உயர் கல்வி அமைச்சர், தொழில் நுட்பக் கல்லூரிகளின் முகாமையாளர்,

பரீட்சைகளில் தோற்றுகின்ற மாணவர்களுக்கு [illegible] தான் இருந்தும் போது [illegible].

டிப்ளோமாப் பயிற்சி நெறிகளுக்கு வழமையாக உள்ளது போல் இரண்டு ஆண்டு

## மலையகத்திலுள்ள அரச வங்கிகளுக்கு

### மலையகத்திலுள்ள அரச வங்கிகளுக்கு

# தமிழ் தெரிந்த ஊழியர் தேவை

# பிரதமரிடம் 'தொண்டா' கோரிக்கை

அரச வங்கிகளுக்குத் தமிழ் தெரிந்த ஊழியர்களை நியமிக்குமாறு கிராமியத் தொழிற்துறை, உல்லாசப் பயணத்துறை அமைச்சர் எஸ். தொண்டமான், பிரதமரும், நிதியமைச்சருமான டி.பி. விஜயதுங்கவிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

தமிழ் பேசும் வாடிக்கையாளரின் தேவைகளைப் பூர்த்தி செய்யத் தமிழில் நன்கு தேர்ச்சிபெற்ற ஊழியர்களை அரச வங்கிகளான இலங்கை வங்கி, மக்கள் வங்கிகளுக்கு நியமிக்குமாறு விஜயதுங்கவிடம் அவர் கோரியுள்ளார்.

மலைநாட்டிலுள்ள மேற்படி வங்கிக் கிளைகளில் தமிழ் தெரிந்த ஊழியர்கள் இல்லாமையால் மலைநாட்டிலுள்ள வாடிக்கையாளர்கள் பெரிதும் சிரமமுறுகின்றனர் என்றும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

● பல்லவி தொடர்கிறது

## 1992 வரை அவகாசம் தேவை என்கிறார் டென்சில்

'1992-ம் வருடம் முடிவதற்குள் வட, கிழக்கில் தீவிரவாதத்தை முற்றாக ஒழிக்க முடியும்'

இப்படி நம்பிக்கை தெரிவித்துள்ளனர், இம்மாகாணங்களுக்கான ஸ்ரீலங்கா பாதுகாப்புப் படைப் பொறுப்பாளர் மேஜர் ஜெனரல் டென்சில் கொப்பேகடுவ. இவ்வாறு கொழும்பு நாளிதழ் ஒன்றுக்கு நேற்று செய்தி வெளியிட்டது.

இது இவ்வாறிருக்க, இவ்விதம் இவர் கூறுவது இது முதல் தடவையல்ல என்பது சுட்டிக் காட்டப்படுகின்றது.

★ 1992 முடிவிற்குள்

## கச்சேரி முறைக்கு முற்றுப்புள்ளி வைக்கப்படும்

அடுத்தவருட முடிவுக்குள் கச்சேரி முறைக்கு முற்றுப் புள்ளி வைக்கப்பட்டுவிடும் என கொழும்புச் செய்திகள் நேற்றுத் தெரிவித்தன.

கச்சேரிகளின் அதிகாரங்களையும், கடமைகளையும் பிரிவுச் செயலாளர்களிடம் ஒப்படைப்பதற்கு ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாஸ மேற்கொண்ட தீர்மானம் 1992 முடிவுக்கு முன்னாக அமுல் செய்யப்படும் எனவும் மேலும் தெரிவிக்கப்பட்டது.

பத்தாயிரம் குடும்பங்கள் வீடிழந்துள்ளன.

ஏழாயிரம் வீடுகள் சேதமுற்றிருப்பதாக அறிய வந்துள்ளது. (16)

## 9 மீனவர் கைது

தடை செய்யப்பட்ட வலயத்தில் இரு கண்ணாடி இழைப்படகுகளில் மீன் பிடித்ததாக ஒன்பது இலங்கை மீனவர்களை இந்தியக் கரையோரப் படையினர் கைது செய்துள்ளனர்.

கன்யாகுமரிக்கப்பால் இவர்கள் பிடிபட்டனராம்.

சமீபத்தில் கொழும்பு சென்று உயர் கல்வி அமைச்சர், தொழில் நுட்பக் கல்லூரிகளின் முகாமையாளர், பரீட்சை ஆணையாளர், உயர் கல்வி அவைச்சின் செயலாளர், கல்வி இராஜாங்க அமைச்சு செயலாளர் ஆகியோருடன் கல்லூரியில் நடைபெற வேண்டிய 89, 90, 91-ம் ஆண்டுப் பரீட்சைகள் தொடர்பாக விரிவாகப் பேச்சு நடத்தினர்.

மாணவர் அவையின் 17அம்சக் கோரிக்கையையும் அவர்கள் கையளித்தனர். இவர்களின் சந்திப்பால் பின்வரும் கோரிக்கைகள் ஏற்றுக் கொள்ளப்பட்டன.

1989, 90, 91 ஆம் ஆண்டு பரீட்சைகள் எதிர்வரும் பெப்ரவரி முதல் வாரத்தில் நடைபெற உறுதியளித்தமை அதற்கான உறுதிப்படுத்தல் பட்ட கடிதத்தையும் அதிபருக்கூடாக அனுப்புதல்.

தொழில் நுட்பக் கல்லூரிக்குக் கொழும்பில் இருந்து அனுப்பி வைக்கப்படுகின்ற எந்தவொரு தகவலும் ஒரு கிழமைக்கு முன்பு அனுப்பி வைப்பதாகவும் அத்தகவல்கள் ஐ.சி.ஆர்.சி. ஊடாகவே தெரிவித்தல்.

1989, 90 ஆம் ஆண்டுப்

பரிசீலனை செய்தல்.

டிப்ளோமாப் பயிற்சி நெறிகளுக்கு வழமையாக உள்ளது போல் இரண்டு ஆண்டு பரீட்சைகள் எடுப்பது என்பதை விடுத்து மூன்று ஆண்டு பரீட்சைகளும் ஒரே நேரத்தில் எடுப்பதற்கும் கால இடைவேளையுடன் அப்பரீட்சைகளை தயாரித்தல்

கல்லூரிக்குத் தேவையான சாதனங்கள் கப்பல் மூலம் உடன் அனுப்பி வைப்பதாகவும் பரீட்சைக்குத் தேவையான சாதனங்களைக் கல்விப் பணிப்பாளர் திரு. சுந்தரலிங்கத்திடம் பெற்றுக் கொள்வதற்கும் ஏற்பாடுகள் செய்தல்.


### சிறு விளம்பரம்

சேவை

"'டயபெடீஸ்' (நீரிழிவு நோய்) ஒழிய நாற்பது நாள்" என்ற பிரசுரத்தை ரூபா 2/- பெறுமதியான அஞ்சல் முத்திரை அனுப்பி பெற்றுக்கொள்ளலாம். "மிக்கிவைற்" த. பெ. இல- 77, யாழ்ப்பாணம். 12077

## கிழக்கில் திட்டமிட்ட விதத்தில்

# தமிழ் மாணவர் புறக்கணிப்பு முஸ்லிம்கள் நலனே கவனிப்பு!

கிழக்கில் திட்டமிட்ட வகையில் தமிழ் மாணவர்கள் புறக்கணிக்கப்பட்டு முஸ்லிம் மாணவர்கள் நலன் பேணப் படுவதாகச் சுட்டிக்காட்டப் படுகின்றது.

1990 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 9 ஆம் திகதி நடை பெற்ற கல்வியியல் கல்லூரிக்கான போட்டிப் பரீட்சைக்குத் தோற்றிய தாம் அனுமதி கிடைக்காது புறக்கணிக்கப் பட்டுள்ளதாகச் சம்பந்தப் பட்ட தமிழ் மாணவர்கள் தெரிவிக்கின்றனர்.

இப்பரீட்சையில் தேர்ச்சி பெற்ற தமிழ் மாணவர்களுக்குக் கொட்டகலை ஆசிரிய கல்லூரியில் பயிற்சி வழங்கப்படுமென முன்னர் அரச வர்த்தமானி அறிவித்திருந்தது.

ஆயினும் இன்று தமிழ்மாண வர்களையும் புறக்கணித்து விட்டுத் தமிழ் மொழி மூலம் பரீட்சை எழுதிச்சித்தி பெற்ற முஸ்லிம் மாணவர்களுக்கு அட்டாளைச்சேனையில் பயிற்சி நெறியை எதிர்வரும் ஜனவரி முதல் ஆரம்பிக்க நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டுள்ளதாம். (16)

## 'மன்னார் மாவட்ட ஆசிரியர் ஜன.1ல் சமுகம் தரவேண்டும்'

மன்னார் மாவட்டத்தில் உள்ள சகல ஆசிரியர்களும் ஜனவரி முதலாம் திகதி கடமைக்குச் சென்றாக வேண்டுமெனப் பணிக்கப்பட்டுள்ளனர்.

இவர்கள் யாவரும் குறிப்பிட்ட தினத்தன்று தத்தம் பாடசாலைகளில் கடமைக்குச் சமுகமளிக்கவேண்டுமென அரசாங்கம் கோரியுள்ளதென அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் நாயகம் விடுத்துள்ள அறிக்கை ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்படித் தகவலை கொழும்பு நாளிதழ் ஒன்று நேற்று வெளியிட்டுள்ளது.

### பீரங்கித்தாக்குதல்

வவுனியாத்துறைக் கடற்பகுதியில் ரோந்து நடவடிக்கையிலீடுபட்டிருந்த ஸ்ரீலங்கா கடற்படையினர் நள்ளிரவு பீரங்கித் தாக்குதல்களை நடாத்தினர்.

## முக்கு முட்டச் சாப்பிடுவதா? கூடவே கூடாது

எப்போதும் தேவைக்கு அதிகமாகச் சாப்பிடக் கூடாது, முறைப்படி சாப்பிடும்போது, வயிற்றின் கொள்ளளவில் மூன்றில் ஒரு பங்கு தான் சாப்பாட்டால் நிரப்பப்பட வேண்டும். இன்னும் ஒரு பங்கு தண்ணீர் குடித்து நிரப்பப்பட வேண்டும் மீதி ஒரு பங்கும் நிரப்பப்படாமலே வெறுமையாக விட்டு விட வேண்டும்.

குறிப்பிட்ட சில உணவு வகைகளை ஒரே நேரத்தில் சாப்பிடக் கூடாது, குறிப்பாக நெய்யையும் தேனையும் ஒன்றாகச் சாப்பிடக் கூடாது மீறிச் சாப்பிட்டால் உடல் நலத்திற்கு கேடுவரும், இதற்கு ஆயுள்வேத மருத்துவத்தில் விருத்தாஹாரம் என்று பெயர்.

பொதுவாகத் தயிரை மோராக்கிய பிறகு பயன்படுத்துவதுதான் நல்லது, இரவு நேரத்தில் தயிரை உபயோகிப்பதை கண்டிப்பாகத் தவிர்க்க வேண்டும்.

மேற்கண்டவாறு ஆயுள் வேத கலாநிதி எம் ராஜகோபால சுப்பிரமணியம் எழுதிய ஆயுர்வேத முறைப்படி உணவு என்ற புத்தகத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. (16)

## வல்வை - ஆயத்து சந்தி; பாதிப்புக்கள் தவிர்க்க சவுக்கம் கன்றுகள்

வல்வையிலிருந்து ஆயத்துச் சந்தி வரையான பகுதியில் சுமார் 3,000 சவுக்கம் கன்றுகள் நாட்டப்பட்டுள்ளன.

யாழ் செயலகத்தின் அனுசரணையுடன் கரவெட்டி உதவி அரச அதிபர் அலுவலகம், விவசாயத் திணைக்களம் ஆகியன இணைந்து இக் மரம் நாட்டும் நடவடிக்கைகளை மேற்கொண்டன.

'உற்பத்திக் குழுக்கள், சன சமூக நிலையங்கள், கிராம அபிவிருத்திச் சங்கங்கள் போன்ற சமூக சேவை நிறுவனங்கள் இம் மரம் நாட்டும் பணிகளில் முன்னின்று செயற்பட்டன. இந் நடவடிக்கைகள் கரவெட்டி உதவி அரசாங்க அதிபர் திரு.இ ஐயாத்துரை தலைமையில் நடைபெற்றன.

வல்வை, சரணவாய்ப் பகுதிகளில் உப்பு உற்பத்தியாகும் பகுதிகளிலிருந்து காற்றால் அள்ளிச் செல்லப்படும் உப்பு மண் கிராமப் பகுதிகளில் பல பாதிப்புக்களை ஏற்படுத்தி வருகின்றன. இவ் உப்பு மண் கிணற்று நன்னீரை உவர் நீராக மாற்றி விடுகிறது பயிர்கள் உற்பத்தியை அழித்து விடுகின்றது. சுற்றாடல் சூழலை மாசுபடுத்தி விடுகின்றது. இப் பாதிப்புக்களைத் தடுக்கும் நோக்கமாகவே இப் பகுதிகளில் சவுக்கு மரக்கன்றுகள் நாட்டப்பட்டுள்ளதாக அறிவிக்கப்படுகிறது.

### சிறைச்சாலை ஊழியர் ஒன்று கூடல்

யாழ்ப்பாண சிறைச்சாலைத் திணைக்கள உத்தியோகத்தர்களின் வருடாந்தப் பொதுக் கூட்டமும் ஒன்று கூடலும் திணைக்களப் பணிமனையில் பதில் அத்தியட்சகர் திரு. பி பாலசுப்பிரமணியம் தலைமையில் நடைபெற்றது.

இந் நிகழ்ச்சியில் யாழ் சிறைச்சாலைத் திணைக்களத்தில் சேவையாற்றி அண்மையில் ஓய்வுபெற்ற 31 உத்தியோகத்தர்களுக்கும் பிரியாவிடை உபசாரம் அளிக்கப்பட்டு பெறுமதிமிக்க பரிசில்கள் சக உத்தியோகத்தர்களின் சார்பில் உதவி அத்தியட்சகர் திரு. [illegible] கே. பரம

## வட்டு. இந்து வாலிபர் சங்கம் மணிவிழா இன்று முதல் மூன்று நாள் நிகழும்

வட்டுக்கோட்டை இந்து வாலிபர் சங்க மணிவிழா இன்று தொடங்கி ஞாயிற்றுக்கிழமை வரை மூன்று தினங்கள் நடைபெறவுள்ளன. அப்பாக்குட்டியும் மூன்றாம் நாள் விழாவில் பிரதம விருந்தினராக கலாநிதி சி.க.சிற்றம்பலமும் கலந்து கொள்வர்.

## அரசியல் அவதானிப்புகள்:

## சார்க் மகாநாட்டின் 'சாதனை'த் தீர்மானங்கள் இரண்டு

- எஸ். ஜி. எம்.

டிசம்பர் 21-ம் திகதி நடைபெற்ற ஒரு நாள் சார்க் உச்சி நிலை மகாநாட்டின் பல்வேறு தீர்மானங்களில் இரண்டு தீர்மானங்கள் முக்கியமானவை.

ஒன்று நிதி உதவி வழங்கும் நாடுகள் அவ்வுதவிகளுக்கும் மனித உரிமை மீறலுக்கும் முடிச்சுப் போடக் கூடாது என்பது. இரண்டாவது "பயங்கரவாதத்தை" ஒழிக்க யாவரும் ஒத்துழைக்க வேண்டும்' என்பது.

### மனித உரிமை மீறலும் நிதி உதவியும்

மனித உரிமைகள் மீறலுடன் நிதி உதவி வழங்கலை இணைக்கக் கூடாதென பலமாகக் குரல் கொடுத்தது சிறிலங்காவே; இதற்கும் ஆழமான ஆதரவு வழங்கியது இந்தியாதான்.

சிறிலங்காவைப் பொறுத்தவரை அது சர்வதேச மன்னிப்புச் சபையையே பயங்கரவாதிகளுக்கு உதவும் அமைப்பு என்று கூறிவருகிறது.

ஆனால் இப்பொழுது அதே சர்வதேச மன்னிப்புச் சபை முன்வைத்த பல ஆலோசனைகளில், அரச படைகளின் அத்துமீறல் தொடர்பான முக்கிய ஆலோசனைகளை நிராகரித்து விட்டு வேறு பல ஆலோசனைகளை ஏற்றுக் கொண்டது.

### இந்தியாவும் மீறியதே

இந்தியாவும், மனித உரிமை மீறல்கள் குற்றச்சாட்டுக்கு அதிகம் இலக்காகிய நாடு.

சிறிலங்கா ஜனாதிபதி சார்க் மகாநாடு முடிவடைந்த பின்பு நடைபெற்ற பத்திரிகையாளர் மகாநாட்டில் மேற்கத்திய நாடுகள் மனித உரிமை மீறல்களுடன் நிதி உதவி வழங்கலை இணைப்பது ஒருவகை நவகாலனித்துவம் என்ற வகையில் பலமாக குரல் கொடுத்திருக்கிறார்.

அதேபோல லோக சபையில் இனவிவகாரங்கள் தொடர்பான விவாதத்தின் ஊடே பேசிய இந்தியப் பிரதமரும் இதே தொனியில் பேசியுள்ளார்.

### வெளிப்படையாக ஒப்புக் கொள்கின்றன

இவற்றிலிருந்து ஒன்று தெளிவாகிறது. இவ்விரு நாடுகளும் தாம் மனித உரிமைகளை மீறுவதை வெளிப்படையாகவே ஒப்புக்கொள்கின்றன என்பதாகும். குற்றமுள்ள நெஞ்சு குறுகுறுக்கும் என்பதற்கு அமைவாகவே இவர்கள் நடவடிக்கை உள்ளது.

இதற்கு மேலாக மேற்கு நாடுகள் வழங்கும் நிதி உதவிகளே மனிதாபிமான அடிப்படையில் தான் அமைந்திருப்பதை இவர்கள் உணராதது வியப்புக்குரியதல்ல. மனிதாபிமான உதவிகளை வழங்கும் போது மனித உரிமைகள் பற்றிப் பேசக் கூடாது எனக் கூற இவ்விரு நாடுகளுக்கும் தார்மீக உரிமை இருக்க முடியாது.

### விடுதலைப் போராட்டங்களே

அடுத்தது 'பயங்கர வாதம்' பற்றியது உண்மையில் இவர்கள் கூறும் பயங்கரவாதம் எல்லாம் விடுதலைப் போராட்டங்களே. அப்போராட்டங்களை நசுக்கவே இந்த நாமகரணம் நடைபெறுகிறது.

தமிழீழ மக்களின் விடுதலைப் போராட்டத்தைத்

வட்டுக்கோட்டை இந்து வாலிபர் சங்க மணிவிழா இன்று தொடங்கி ஞாயிற்றுக்கிழமை வரை மூன்று தினங்கள் நடைபெறவுள்ளது.

வட்டுக்கோட்டை திருஞானசம்பந்த வித்தியாசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ள இன்றைய நிகழ்ச்சிகளில் பிரதம விருந்தினராக தமிழீழ விடுதலைப்புலிகள் கலை, பண்பாட்டுக் கழகப் பொறுப்பாளர் கவிஞர் புதுவை இரத்தினதுரை கலந்துகொள்வார்.

இரண்டாம் நாள் விழாவில் பிரதம விருந்தினராக சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டியும் மூன்றாம் நாள் விழாவில் பிரதம விருந்தினராக கலாநிதி சி.க.சிற்றம்பலமும் கலந்து கொள்வர்.

...வில் பல பாதிப்புகளை ஏற்படுத்தி வருகின்றன. இவ் உப்பு மண் கிணற்று நன்னீரை உவர் நீராக மாற்றி விடுகிறது பயிர்கள் உற்

...விடை உபசாரம் அளிக்கப்பட்டு பெறுமதிமிக்க பரிசில்கள் சக உத்தியோகத்தர்களின் சார்பில் உதவி அத்தியட்சகர் திரு. இ. கே. பரமலிங்கத்தால் வழங்கப்பட்டன.

ஈற்றில் சிறைச்சாலைத் திணைக்கள உத்தியோகத்தர்கள் நலன்புரிச் சங்கக் காரியதரிசி திரு. எம். குலேந்திரநாதன் நன்றியுரை நிகழ்த்தினார். (16)

எழுந்தது 'பயங்கர வாதம்' பற்றியது உண்மையில் இவர்கள் கூறும் பயங்கரவாதம் எல்லாம் விடுதலைப் போராட்டங்களே. அப்போராட்டங்களை நசுக்கவே இந்த நாமகரணம் நடைபெறுகிறது.

தமிழீழ மக்களின் விடுதலைப் போராட்டத்தைப் 'பயங்கரவாதம்' என்கிறது ஸ்ரீலங்கா அரசு.

பஞ்சாபியர்களதும், ஜம்மு - காஷ்மீரியரதும், அஸாமியர்களதும் விடுதலைப் போராட்டங்களைப் 'பயங்கர வாதம்' என்று கூறும் இந்திய அரசு அதற்கு ஒருபடி மேல் சென்று பயங்கர வாதத் தடைச் சட்டத்தை உபயோகித்துத் தமிழ்நாட்டு மக்களையும் தண்டிக்கிறது உத்தரப் பிரதேசத்துத் தீவிர வாத நடவடிக்கைகளும் இவ்வாறே கையாளப்படுகின்றன. பூட்டானும் நேபாள இனத்தவர் தெற்குப் பூட்டானில் முன்னெடுக்கும் விடுதலைப் போராட்டத்தைப் 'பயங்கர வாத' முலாம் பூசி முடக்க முனைந்து நிற்கிறது.

ஆகவே இந்த இரண்டு தீர்மானங்களும் ஒன்றோடு ஒன்று தொடர்புடையவை அரச பயங்கர வாதங்களை மறைக்கவும், அவற்றுக்கு நியாயம் கற்பிக்கவும் எடுக்கப்பட்டவை என்பது தெளிவாகும்.

### அரச பயங்கரவாதங்கள்

அரச பயங்கர வாதங்களினாலேதான் மனித உரிமைகள் மீறப்படுகின்றன. அவை விடுதலைப் போராட்டங்கள் நசுக்கப்படும்போதே நடைபெறுகின்றன.

பிச்சைக்காரர்கள் தெரிவாளர்களாக இருக்க முடியாது என்பது ஓர் ஆங்கில முதுமொழி.

உண்மையாகத் துணிச்சலும், நேர்மையுமுள்ளவர்களாயின் ஸ்ரீலங்காவும், இந்தியாவும் உதவி வழங்கும் நாடுகள் விதிக்கும் மனித உரிமை மீறல்களுக்கு எதிரான நிபந்தனைகளைக் கண்டிப்பதையும், விமர்சிப்பதையும் விட்டு விட்டு நிதி உதவி கோரிக் காவடியெடுப்பதை நிறுத்த வேண்டும். அப்படிச் செய்யாமல் உதவி வேண்டும், நிபந்தனை வேண்டாம் என்பது எடுபடக் கூடிய வாதம் அல்ல, அது விதண்டாவாதமே.

### போனஸ் வேண்டுமென

## சீனித் தொழிற் சங்க ஊழியர் வேலைநிறுத்தம்

வருடாந்த போனஸ் பணமாக 7,500 ரூபா வழங்கக் கோரி செவனகல சீனித் தொழிற்சாலையைச் சேர்ந்த இரண்டாயிரத்திற்கும் அதிகமான ஊழியர்கள் கடந்த 17 ஆம் திகதி முதல் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

ஹிங்குரான சீனித்தொழிற்சாலை, வாழைச்சேனை, எம்பிலிப்பிட்டிய காகிதத் தொழிற்சாலைகள் ஆகியவற்றின் ஊழியர்களுக்கு போனஸ் வழங்கி இருக்கையில் கூடுதலான சீனியை உற்பத்தி செய்யும் தங்களுக்கு மாத்திரம் போனஸ் வழங்காததற்குக் காரணம் என்ன என வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டுள்ள சீனித் தொழிற்சாலை ஊழியர்கள் கேட்கின்றார்கள் எனத் தெரிவிக்கப்படுகிறது.

## குவைத்தில் 40 ஆயிரம் இலங்கையர்க்குத் தொழில்

கடந்தவருடம் இடம்பெற்ற வளைகுடா யுத்தத்தின் பின்னர் குவைத்தில் புதிதாகத் தொழில் பெற்று 40 ஆயிரம் பேர் இலங்கையிலிருந்து சென்றுள்ளனர்.

யுத்தத்தின் போது அங்கிருந்து திரும்பிய 76 ஆயிரம் பேரிலும் கணிசமான தொகையினர் மீண்டும் அங்கு தொழில் பெற்றுச் சென்றுள்ளனர்.

இவர்களில் அநேகமானோர் வீட்டுப் பெண்களாவர்.

### ஆய்வரங்கு

சமூக, பொருளாதார, விஞ்ஞான ஆய்வு இதழான 'ஆதாரம்' ஆய்வரங்கு நாளை சனிக்கிழமை காலை 9 30 மணிக்கு யாழ் பல்கலைக்கழக கைலாசபதி அரங்கில் நடைபெறவுள்ளது

தமிழீழ ஆய்வு நிறுவனம் இதற்கான ஏற்பாட்டினை மேற்கொண்டுள்ளது.

### 37 லட்சம் வீரர்

சோவியத் ஆயுதப்படையில் 37 இலட்சம் வீரர்கள் உள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

### கலை நிகழ்ச்சி

விடுதலைப் புலிகள் மாணவர் இயக்க ஆதரவில் விடுதலைப் புலிகளின் கலை பண்பாட்டுக் கழகத்தினரின் "சந்தனக்காடு" நாடகமும், சாந்தன் இசைக்குழுவின் "போர்க்கால ராகங்கள்" இசை நிகழ்ச்சியும் பரியோவான் கல்லூரி மண்டபத்தில் தை மாதம் 2, 3 ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளன.

பொதுமக்கள், அன்பர்கள், கலா ரசிகர்கள், மாணவர்கள் ஆகியோரின் ஒத்துழைப்பையும் ஆதரவையும் விடுதலைப்புலிகள் மாணவர் இயக்கத்தினர் வேண்டுகின்றனர்.

## முல்லை. வங்கி ஆவணங்களை மீட்க அதிகாரிகள் முயற்சி

முல்லைத்தீவில் மூடப்பட்டுக் கிடக்கும் இலங்கை வங்கி ஆவணங்களை மீட்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

ஆவணங்களை மீட்பதற்கு வங்கி உயர் அதிகாரிகள் இராணுவ உயர் அதிகாரிகளின் உதவியை நாடி வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

மீட்கப்பட்ட ஆவணங்களுடன் முல்லைத்தீவு இலங்கை வங்கி வவுனியாவில் யுனிட் இலங்கை வங்கியாக செயற்படவுள்ளதாகவும் தெரிய வருகிறது. (08)

## பதுக்கலுக்கு அஞ்சி கொள்வனவில் மக்கள் மும்முரம்

# கிளிநொச்சியிலும் ம. எண்ணை

# கட்டுப்பாட்டு விலையில் ஏற்பாடு

கிளிநொச்சியிலும் மண்ணெண்ணெய் கட்டுப்பாட்டு விலையில் விற்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக கிளிநொச்சி செயலக வட்டாரங்கள் தெரிவித்தன.

ஒரு லீற்றர் மண்ணெண்ணெய் 25 ரூபாவிற்கு விற்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும், கிளிநொச்சிப்பகுதியிலுள்ள மூகவர்கள் தற்போது கொழும்பு சென்று மண்ணெண்ணெய் கொண்டுவர முயற்சிகள் மேற்கொள்வதாகவும் தெரிவிக்கப்பட்டது.

கிளிநொச்சியில் தற்போது லீற்றர் 60 ரூபாவுக்கு மண்ணெண்ணெய் விற்பனை செய்யப்படுவதாகவும் மண்ணெண்ணெய் கட்டுப்பாட்டு விலைக்கு கொண்டுவரப்படவுள்ளதையறிந்த அப்பகுதி விவசாயிகள் இப்போதே மண்ணெண்ணெய் கொள்வனவில் மும்முரமாக உள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

மண்ணெண்ணெய் கட்டுப்பாட்டு விலை அமுலானதும் பதுக்கல் இடம் பெறலாம் எனவும் விவசாயிகள் அச்சம் தெரிவிக்கின்றனர். 17

## அறுபது வீத வயல் நிலங்கள் வன்னியில் தரிசாகியுள்ளன

வன்னிப் பகுதியில் இம்முறை காலபோக வேளாண்மைச் செய்கையில் குறைந்தளவு விவசாயிகளே மேற்கொண்டுள்ளனர்.

இப் பிராந்தியத்தில் ஏற்பட்டுள்ள பொருளாதாரம், உரம், எரிபொருள் போன்றவற்றிற்கான தட்டுப்பாட்டினால் ஏழை விவசாயிகள் உட்பட பலர் இச் செய்கையை கைவிட்டுள்ளனர்.

இந் நெருக்கடிநிலையால் அறுபது வீதமான நெல் வயல்கள் செய்கை பண்ணப்படாமல் தரிசு நிலங்களாகக் காணப்படுகின்றன. (08)

## இராணுவம் ஒப்புக்கொள்கிறது.

## மணலாறு மோதலில் 21 படையினர் பலியாம்!

மணலாறு மாவட்டம் கொக்குத்தொடுவாயில் ஸ்ரீலங்காராணுவத்தினருக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையில் நடந்த உக்கிரமான மோதலில் பல இராணுவத்தினர் கொல்லப்பட்டதாகத் தெரியவந்தபோதிலும் 21 படையினர் மட்டுமே பலியானதாக இராணுவத் தரப்பினர் தற்போது அறிவித்துள்ளனர்.

இம் மோதலில் முன்னர் 11 படையினரே கொல்லப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டிருந்தபோதிலும் அதைவிடக் கூடிய தொகையினர் பலியானதாக இராணுவம் தற்போது ஒப்புக் கொண்டிருக்கிறது.

வடக்கு கிழக்கு மாகாணங்களை இணைக்கும் எல்லை மாவட்டமான மணலாறு தனது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர இராணுவம் எடுக்கும் தீவிர முயற்சி முறியடிக்கப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது.

## பயணிகள் ரயில் மீது சூடு

## 47 பேர் பலி; 20 காயம்

ஹரியானா மாநிலத்தில் நேற்றிரவு ஏழரை மணியளவில் பயணிகள் ரயில் மீது சீக்கிய தீவிரவாதிகள் சரமாரியான துப்பாக்கிச் சூடு நடத்தியதில் 47 பேர் பலியாகினர். 20 பேர் காயமடைந்தனர்.

குறிப்பிட்ட ரயிலிலேயே பயணம் செய்த தீவிரவாதிகள் ரயில் கடவை ஒன்றில் ரயிலை நிறுத்தி பயணிகள் மீது துப்பாக்கிச் சூடு நடத்தியதாகத் தெரிவிக்கப்படுகிறது. இச் சம்பவத்தைத் தொடர்ந்து அம் மாநிலத்தில் பதற்ற நிலை ஏற்பட்டுள்ளது.

## தமிழக அகதி முகாம்களில் பத்திரிகை வாசிக்கவும் தடை

தமிழ் நாட்டிலுள்ள அகதி முகாம்களில் தங்கியுள்ள இலங்கைத் தமிழ் அகதிகளுக்கு பத்திரிகை வாசிக்க முகாம் அதிகாரிகளால் தடை விதிக்கப்பட்டுள்ளதாம்.

இதனால் இங்கு நடைபெறும் செய்திகளை அறிய முடியாத நிலை உள்ளதாக முகாம்களில் உள்ளவர்கள் இங்குள்ள தமது உறவினர்களுக்கு எழுதிய கடிதங்களில் குறிப்பிட்டுள்ளனர்.

இலங்கைத் தமிழ் அகதிகள் அடிக்கடி முகாம் மாற்றப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது (08)

## உணவுப் பொருள் விநியோகம்

காரைநகர் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தினர் உலர் உணவு விநியோகத்திற்கான 'இ' அட்டைக்குரிய 35 ஆம், 36 ஆம் கட்ட உணவுப் பொருள்கள் எதிர்வரும் திங்கட்கிழமை முதல் வழங்கப்படவுள்ளன.

காரைநகர் ப. நோ. கூ. சங்கக் கிளைகளில் இந்த உணவுப் பொருள்கள் விநியோகிக்கப்படும் எனத் தெரிவிக்கப்படுகிறது. 18

## வெங்காயம் தேக்கம்

போக்குவரத்து சிரமமையால் யாழ்மாவட்டத்தில் வெங்காயம் பெருமளவில் தேங்கியுள்ளது.

கடந்தமுறை பயிரிடப்பட்ட வெங்காயம் விற்பனையாகாமையால் பெருமளவில் தேங்கியுள்ளது சில இடங்களில் தேங்கியுள்ள வெங்காயம் முளைத்து பழுதடைந்துள்ளது சில விவசாயிகள் தேங்கியுள்ள வெங்காயத்தை மீண்டும் பயிரிட்டுவருகின்றனர் 10

..... உதவிப் ...

பாராளுமன்றத்தில் கூறினார்

இனசக்திப் பட்டியலில் ஒருவர் பெயர் இருப்பின் இப் பணம் அவருக்குக் கிடைக்கமாட்டாதெனவும் இது தவறான நடைமுறையெனவும் கூறிய அவர் இந்த உதவிப் பணம் பெறுபவர்களுக்கு வாழ்க்கைச் செலவு வேதனமும் அளிக்கப்படல் வேண்டும் என மேலும் கூறினார்

..... நிவாரணத்தை ...

பாராளுமன்றில்தெரிவித்தார்

வடக்கில் பலர் இடம் பெயர்ந்து அல்லல் படுவதாகவும், பெரும் குடும்பங்களைக் கொண்டவர்களுக்கு இத்தொகை அதிகரிக்கப்படல் வேண்டுமெனவும் மேலும் அவர் வலியுறுத்தினார்.

..... நொச்சிமோட்டை ...

ம்பினர்.

இதேவேளை வவுனியா சேத்குப் பகுதியில் மக்கள் குடியிருப்புகள் மீது தொடர்ந்து ஷெல் தாக்குதல்களை படையினர் மேற்கொண்டு வருகின்றனர் ஹெலிகொப்டர்களும் இடையிடையே தாக்குதல் நடத்திவருகின்றன:

இதனால் இப்பகுதிகளிலிருந்து பெருமளவு மக்கள் இடம் பெயர்ந்து மடு அகதி முகாம்களில் தஞ்சமடைந்துள்ளனர்

இதேவேளை வவுனியாவில் படையினர் மேற்கொண்ட ஒபரேஷன் பிளக்போக் (Black Fog) இராணுவ நடவடிக்கை விடுதலைப்புலிகளின் பலத்தைக் குறைக்கவே எடுக்கப்பட்டது என வடபகுதி இராணுவத் தளபதி கொப்பேகடுவ தெரிவித்துள்ளதாக கொழும்புச் செய்திகள் தெரிவித்தன

..... இரு ...

..... ரஷ்ய ..

இதேவேளை நேற்று இரவு தடைவையாகக் கூடிய சோவியத் பாராளுமன்றம் தன்னைத்தானே கலைத்துக் கொள்வதாகத் தீர்மானம் நிறைவேற்றியது

..... வலிகைக் ...

ளான மீன் பிடி வள்ளம் ஒன்று கடலில் கைவிடப்பட்டதாக அதிலிருந்து தப்பி வந்த மீனவர் தெரிவித்தனர்,

மேற்படி தாக்குதல்கள் வல்லை,பொலிகண்டி, திக்கம், இன்பருட்டி, சுற்றோட்டை ஆகிய பகுதிகளை நோக்கியே நடத்தப்பட்டது இத்தாக்குதலின் போது சுற்றோட்டையில் பல மீன்பிடி வள்ளங்கள் பலத்த சேதத்துக்குள்ளாகின ஆதிகோவிலடியைச் சேர்ந்த சுகிபுலிங்கம் என்பவரது ரூபா 80ஆயிரம் பெறுமதியான மீன் பிடி இயந்திர உபகரணங்களும் படகும் சுக்குநூறாகியுள்ளது. இதில்

..... மன்னார்தீவு ...

ஆதரவில் சமூகவிரோதக் கும்பல் ஒன்றேஇக்கொலைகளைச் செய்வதாக தெரியவருகிறது.

..... ஸ்ரீ லங்கா ...

துகளை, பாகிஸ்தான் 3 தங்கப் பதக்கங்களையும், பங்களாதேஷ் ஒரு தங்கப்பதக்கத்தையும் பெற்று முறையே மூன்றாம் நான்காம் இடங்களில் உள்ளன.

..... அம்புலன்ஸ் ...

களுக்கு இதுவரை சிறிய அளவே ஒதுக்கப்பட்டுவந்த எரிபொருள்கள் தீர்ந்து போனதால் மேற்படி கஷ்டம் ஏற்பட்டுள்ளதாகத் தெரியவருகின்றது.

சகல நோயாளர்கள் வேறு வைத்தியசாலைக்கு இடமாற்றம் செய்வதில் நோயாளரும் வைத்தியசாலை நிர்வாகமும் பெரும் கஷ்டம் அடைந்துள்ளனர். 09

## அறிமுக அட்டைகள் வந்தன

கொழும்பிலிருந்து இம்முறை வந்த தபால் பொதிகளில் தபால் அறிமுக அட்டைகள், முத்திரைவகைகள் பதிவுத்தபால்கள் வந்துள்ளதாக தபாலக வட்டாரங்கள் தெரிவித்தன. 06

## சிகிச்சைப் பிரிவு

தீவுப்பகுதியிலிருந்து இராணுவ நடவடிக்கையால் இடம் பெயர்ந்து யாழ்குடா நாட்டில் தங்கியிருக்கும் தீவகப் பகுதிகளிலுள்ள மக்களுக்காக நல்லூர் கோவில் வீதியில் உள்ள மங்கையற்கரசி வித்தியாசாலைக்கு அருகாமையில் வெளிநோயாளர் பகுதி சிகிச்சைப் பிரிவு திறக்கப்ப...

## கருத்தரங்கு

வள அணி ஆசிரியர்பயிற்சிக் கருத்தரங்கு விடுதலைப் புலிகள் மாணவர் இயக்கத் தலைமைச்செயலகத்தில் 30 ஆம் திகதிவரை நடைபெறும்

## களஞ்சியம் திருத்தம்

விமானக் குண்டு வீச்சினால் சேதமடைந்த பருத்தித்துறை துறைமுகக் களஞ்சியம் உடுப்பிட்டி ப. நோ. கூ. சங்கத்தினால் திருத்தியமைக்கப்பட்டுள்ளது

யாழ் செயலக புனர் வாழ்வுப் பகுதியினர் இக்களஞ்சிய...

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
கல்வியாண்டு 1990/91
விவசாய பீடம்
விவசாய பீடம்-1-ம் (புதிய)

**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்**
**கல்வியாண்டு 1990/91**
**விவசாய பீடம்**

விவசாய பீட 1-ம் (புதிய) 2ம் வருட மாணவர்களுக்கான 1990/91 ஆம் கல்வியாண்டு 1992 ஜனவரி மாதம் 1-ம் திகதி கிளிநொச்சி விவசாய பீடத்தில் ஆரம்பமாகும்.

12079 பதிவாளர்.

...தைக் குறைக்கவே எடுக்கப்பட்டது என வடபகுதி இராணுவத் தளபதி கொப்பேகடுவ தெரிவித்துள்ளதாக கொழும்புச் செய்திகள் தெரிவித்தன.

## இரு...

சாலை ஆகிய முகாம்களில் தங்கியிருக்கும் மக்கள் போதிய மலசலகூட வசதிகள் இல்லாமல் கஷ்டப்படுகின்றனர். ஆவரங்கால் மகாஜன முகாம் துப்புரவு செய்யப்படாததால் தொற்றுநோய் பரவுகின்றது. (06)

...கள் பலத்த சேதத்துக்குள்ளாகின. ஆதிகோவிலடியைச் சேர்ந்த சுப்புலிங்கம் என்பவரது ரூபா 80 ஆயிரம் பெறுமதியான மீன் பிடி இயந்திர உபகரணங்களும் படகும் சுக்குநூறாகியுள்ளது. இதிலிருந்தோர் கடலில் குதித்து தப்பிவந்துள்ளனர்.

இதனால் இப்பகுதி மக்களிடையே பதற்றநிலை காணப்பட்டது. 08, 09, 10

## ஜெனிவாவில் –

இதேவேளை ஐ.நா. பாதுகாப்புச் சபையில் புதிய ரஷ்ய குடியரசு இடம்பெறுவதை ஜேர்மனியும் அங்கீகரித்துள்ளது.

## மண்ணெண்...

ணெயைக் கொண்டுவரவுள்ளனர்.

இந்த இரண்டு லோரிகளும் மண்ணெண்ணெய் வந்து சேர்ந்ததும் பங்கீட்டு அடிப்படையில் இவைகள் மூலம் சகலருக்கும் விநியோகிக்கப்படுமெனத் தெரிவிக்கப்படுகிறது. (18)

## ஆயுதங்களை...

குறிப்பிட்டார்.

அண்மையில் உல்பா தீவிரவாதிகள் யுத்த நிறுத்தம் செய்துள்ளதாக அறிவித்து பிரச்சினையை பேசித்தீர்க்க அரசை முன்வருமாறு அழைப்பு விடுத்திருந்தமை தெரிந்ததே.

...பட்டுள்ளதாகத் தெரியவருகின்றது.

சகல நோயாளர்கள் வேறு வைத்தியசாலைக்கு இடமாற்றம் செய்வதில் நோயாளரும் வைத்தியசாலை நிர்வாகமும் பெரும் கஷ்டம் அடைந்து வருகின்றனர். 09

## ஜேர்மனியில்...

இதே வேளை 'நியூ நாஸி' இயக்கத்தின் 53வது நிறைவு தினத்தையொட்டி இவ்வமைப்பின் தீவிரவாதிகளால் வெளிநாட்டவர்களுக்கு எதிரான தீவிரவாதிகளின் ஊர்வலமும் ஏற்பாடுசெய்யப்பட்டிருந்தது.

இவ்விரு ஊர்வலங்களும் ஒரு சந்தர்ப்பத்தில் நேரில் நேராகச் சந்தித்தபோது பெரும் கைகலப்பு மூண்டது. பலர் காயமடைந்தனர்.

ஸ்தலத்திற்கு விரைந்த பொலிசார் கிழக்கு ஜேர்மன் நகரான ஹாலில் வைத்து 250 பேரைக் கைது செய்தனர். இவர்களிடமிருந்து கத்தி கோடரி, றைபிள்கள் என்பவனம் மீட்கப்பட்டன.

கைகலப்பின் போது நாஸி இயக்கத்தினரது வாகனங்கள் பலவும் அடித்து நொருக்கப்பட்டன.

கடந்த ஆகஸ்ட் மாதம் முதல் ஜேர்மனியில் வசிக்கும் வெளிநாட்டவர்களுக்கு எதிராக நாஸி தீவிரவாதிகளால் 400 தாக்குதல் சம்பவங்கள் இடம் பெற்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

...பெயர்ந்து யாழ்குடா நாட்டில் தங்கியிருக்கும் தீவகப் பகுதிகளிலுள்ள மக்களுக்காக நல்லூர் கோவில் வீதியில் உள்ள மங்கையற்கரசி வித்தியாசாலைக்கு அருகாமையில் வெளிநோயாளர் பகுதி சிகிச்சைப் பிரிவு திறக்கப்படவுள்ளதாக, ஊர்காவற்றுறை செஞ்சிலுவைச் சங்கக் கிளை அறிவித்துள்ளது. 06

## உலர் உணவு கடைசி நாள்

அச்சுவேலி ப.நோ.கூ.சங்கக் கிளைகளில் மாணவர் மதிய உணவு முத்திரைக்கு இதுவரை உலர் உணவுப் பொருள்களை பெற்றுக் கொள்ளாதோர் இன்று தத்தமது கிளைகளில் முத்திரைகளை ஒப்படைக்குமாறு சங்க பொதுமுகாமையாளர் கேட்டுக் கொண்டுள்ளார்.

இதுவே மாணவர் மதிய உணவு முத்திரைக்கு பொருள்கள் பெறுவதற்கான இறுதித் திகதி எனவும் அவர் தெரிவித்துள்ளார். 43

விமானக் குண்டு வீச்சினால் சேதமடைந்த பருத்தித்துறை துறைமுகக் களஞ்சியம் உடுப்பிட்டி ப.நோ.கூ. சங்கத்தினால் திருத்தியமைக்கப்பட்டுள்ளது

யாழ் செயலக புனர் வாழ்வுப் பகுதியினர் ஒதுக்கிய திருத்தத்துக்கான நிதியை ஒதுக்கீடு செய்திருந்தனர். (10)

## அம்பாறையில் கால்நடைகள் இல்லை

அம்பாறை மாவட்டத்திலுள்ள விவசாயிகள் தங்களது கால் நடைகள் எல்லாவற்றினையும் சமீப காலங்களில் நிகழ்ந்த வன்முறைகளின்போது இழந்து விட்டதாக அம்பாறை மாவட்ட எம். பி. பாராளுமன்றத்தில் கூறினார்,

பொத்துவில் தொடக்கம் அம்பாறை வரை உழுவதற்குகூட எருதோ, எருமையோ இல்லையென மேலும் கூறினார்.

## கருத்தரங்கு

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் தொழிலாளர் கல்விக்கழகத்தினரால் எதிர்வரும் 28 ஆம் திகதி (சனிக்கிழமை) பி.ப. 2. 30 மணிக்கு புவியியல் மண்டபத்தில் ''கால் நடை நோய்களும் அதற்கான தீர்வுகளும்'' என்ற தலைப்பில் வைத்திய கலாநிதி (திருமதி) சு. தனபாலசிங்கம் அவர்கள் கருத்துரை வழங்குவார். அனைவரையும் கலந்து கொள்ளும்படி கேட்டுக் கொள்ளுகின்றார்கள்.

வி. இரத்தினகுமார்
செயலாளர்

நீ. இ. உதயகுமார்
தலைவர்

12078

## தேவை

யாழ் மாநகரசபை எல்லைப் பகுதியில் காரைநகர் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் அமைக்க விருக்கும் கிளைக்கு வசதியான கட்டிடம் தேவைப்படுகிறது. வாடகை மற்றும் விவரங்களைப் பொது முகாமையாளருடன் நேரில் தொடர்பு கொள்ளவும்.

12080 — பொது முகாமையாளர்

இப்பத்திரிகை முரசொலி பப்ளிஷேர்ஸ் (பிறைவேற்) லிமிற்றெட் நிறுவனத்தினரால் யாழ்கல்வியங்காடு டச்சுவீதி 'லஷ்மிபில்டிங்'கில் உள்ள அச்சகத்தில் 27. 12. 1991இல் அச்சிட்டுவெளியிடப்பெற்றது.